# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு— 2010
வைகாசி 2
ஜமா ஆகி 18
புதன் (16-5-1979)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 100
விலை சதம் 50


# அழைக்கின்றார் தந்தை செல்வா! அழைக்கின்றார் அமரர் ஜீ. ஜீ.



## தமிழினத்தின் இறுக்கமான ஒற்றுமை, தன்மானம், தமிழீழ விடுதலை இவற்றின் சின்னமே உதயசூரியன்

## விடுதலைக்கூட்டணிக்கு வாக்களித்து இனத்தின் இலட்சியத்தை பேணுவீர்



### தமிழீழ விரோதிகளை வாக்குச் சீட்டால் விரட்டுவீர்!

எதிர்வரும் 19-5-79ல் தமிழ்ஈழத்திலுள்ள ஆறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு—திருக்கோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி — ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெறுகிறது. தமிழ்பேசும் மக்கள் தமது வாக்குரிமையைப் பிரயோகித்து தத்தமது உள்ளூராட்சிமன்றங்களை எந்தக் கட்சி ஆளவேண்டும் என்பதைத் தாங்களே தீர்மானிக்கப்போகிறார்கள்.



இத்தேர்தலிலே தமிழினத்தை அடக்கியாளும் ஐ.தே. கட்சியும், அக்கட்சியுடன் இரகசிய உறவு கொண்டுள்ள குமார் பொன்னம்பலம் கட்சியும், தமிழினத்தின் தனிப்பெரும் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியும் மற்றும் சில சுயஇச்சைக் குழுக்களும்போட்டியிடுகின்றன.



இந்தத் தேர்தலிலே விழுகின்ற ஒவ்வொரு வாக்கும் கட்சிக்கும், அதன் கொள்கைக்கும் விழுகின்ற வாக்குகளாகக் கணிக்கப்படுமே தவிர — தனிபட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகளாக கணிக்கப்படமாட்டாது.

எனவே இத்தேர்தலிலே வாக்களிப்பதிலே எந்த ஒரு வேட்பாளருடனும் ஒருவர் கொண்டுள்ள தனிப்பட்ட கோபதாபங்கள் குறுக்கிடுமானால். அது கட்சியையும், இலட்சியத்தையுமே பாதிக்குமே தவிர அந்தத் தனிப்பட்ட நபரையல்ல, இதை ஒவ்வொருவரும் மறக்காது நெஞ்சிலே இருத்திக் கொள்ள வேண்டும்.



தமிழீழக் கோரிக்கையில் இருந்து—கிழக்கை வீழ்த்தி விட்டோம் என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொக்கரிக்கும் ஐ.தே.கட்சி வடக்கையும் விழுத்திவிடலாம் என்ற போலி நம்பிக்கையோடு தமிழீழஉள்ளூராட்சி மன்றங்களிலே போட்டியிடுகிறது.

1977 ஆடிப்பொதுத்தேர்தலிலே தமிழீழ மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பை மதிக்கமறுத்து — தமிழீழ மக்களை தொடர்ந்து அடக்கியாண்டுவரும் ஐ.தே. கட்சிக்கு மானமுள்ள ஒரு தமிழன் வாக்களிக்க முடியுமா?



தமிழ் இனத்தின் தனித்துவத்தை ஏற்காத ஐக்கிய இலங்கை, சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி, ஒற்றையாட்சி அரசியலமைப்பு, பௌத்த மதத்துக்கே அரசியல் சட்டத்தில் முதலாவது முக்கிய இடம்—தேசியக்கொடியிலும் பௌத்த சின்னமான அரசிலை—இவற்றையே கொள்கையாகக்கொண்ட ஐ, தே. கட்சிக்கு தமிழ் பேசும் மக்கள் வாக்களிக்கலாமா?

1977 இனக்கலவரத்தின் போது — யுத்தம் என்றால் யுத்தம் அமைதியென்றால் அமைதி—என்று தமிழ் மக்களுக்கு சவால்விட்டதுடன், கலவரத்தை உடனடியாக அடக்காது இரண்டு வார காலம் நீடிக்கவிட்டு 300க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்படவும், பல்லாயிரம்பேர் சொத்துக்களை இழக்கவும், எத்தனையோ தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்படவும், 50000 பேர் அகதிகளாகக் கப்பலேறவும் 'விட்டுப்பிடித்த' ஆட்சிக்கு தமிழன் வாக்களிக்க முடியுமா?



தமிழ் பேசும் மக்களுக்கென்றோர் பாரம்பரியத் தாயகம் இத்தீவிலே கிடையாது என்று பாராளுமன்றத்திலே அறுதியிட்டுரைத்த ஜே. ஆர். கட்சிக்கு தமிழ் பேசும் மகன் எவனாவது வாக்களிக்க முடியுமா?

திருக்கோணமலை. சேருவில கந்தளாய், அல்லை, பதவியா, அம்பாறை போன்ற தமிழ் பேசும் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடத்தி—அவற்றை சிங்களமயமாக்கிவிட்டு—இன்று மாதுறு ஓயாத்திட்டமூலம் தென் தமிழீழத்தையே விழுங்க முனையும் சிங்கள ஏகாதிபத்திய ஐ. தே. கட்சிக்கு தமிழ் பேசும் மகன் வாக்களிக்க முடியுமா?




வவுனியாவை சிங்கள மயமாக்குவதற்காக மதவாச்சித் தொகுதியிலிருந்து மூன்று சிங்கள உதவி அரசாங்கப்பிரிவுகளை வவுனியாவுடன் இணைக்கத்திட்டமிட்டுள்ள யூ. என். பிக்கு ஒரு தமிழ் வாக்காவது கிடைக்க முடியுமா?

தமிழீழக் கோரிக்கையை முறியடிப்பதற்காக—தமிழ் பேசும் மக்களுக்கென்றோர் சொந்த நிலமே இல்லாமற் செய்வதற்காக—தமிழ் பிரதேசத்திலே சிங்களவரைக் குடியேற்றும் கொள்கையை தனது கொள்கையாக ஏற்றுக்கொண்ட ஐ,தே.க.வுக்கு தமிழன் வாக்களிப்பானா?



வெண்காயம், மிளகாய் போன்ற உபஉணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து ஈழத்தமிழ் விவசாயியின் வயிற்றிலடித்து தமிழர்களின் பொருளாதார வாழ்வையே சீரழித்த ஐ. தே, கட்சிக்கு தமிழ் மகன் வாக்களிப்பானா?



புத்தளம் பள்ளிவாசல் படுகொலைபற்றி விசாரணை நடத்துவதற்கு ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டாகி

—4-ம் பக்கம் பார்க்க

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

# வீரத்தின் விளை நிலம் வல்வெட்டித்துறை

## அங்கு வீணருக்கிடமில்லை என்பதை மே19 நிரூபிக்கும்

வல்வெட்டித்துறையில் மட்டுமன்றி தமிழ் ஈழமடங்கிலும் இராணுவப் படை மட்டுமின்றி சிங்கள ஏகாதிபத்தியத்தின் சகல அடக்குமுறைப்படைகளும் சட்டவிரோதமாகக் குவிக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு முகாமுக்கு தமிழீழ மக்களின் வரிப்பணத்தில்13000 ரூபா தொடக்கம் 17000 ரூபாவரை செலவிட்டுஅவிச்சுக் கொட்டி தீனிபோட்டு வளர்க்கப்பட்டுதமிழ் இனத்தை அடக்கி ஆளப்பயன்படுத்தப்பட்டு வருவதுசர்வதேசமும்அறிந்தஒருபேருண்மையாகும். இதிலும் இராணுவப்படையானது காலத்திற்குக்காலம் கட்டவிழ்த்துவிடப்பட்டு தமிழ் ஈழமடங்கிலும் செய்துவரும்அனர்த்தங்கள் அநேகம் அநேகம்.

அதிலும் குறிப்பாக அக்கிரமங்களுக்கு எதிராக உக்கிரமாக வேங்கையெனப் போராடும் வல்வெட்டித்துறை மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட கொடுமைகள் சொல்லில் அடங்கா, ஏன் சில மாதங்களுக்கு முன்பு கூட வல்வை நகர் முழுவதும்நாடாத்தப்பட்ட இராணுவ தர்பாரின் சுவடுகள் வடுக்கள் கூட இன்னும் மறையவில்லை.

இந்த நிலையில். தார்மீகச் சாமியார்எதிர்க்கட்சித்தலைவராகவிருந்தபோதுவல்வையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை தாம் பதவிக்கு வரும் பட்சத்தில் அகற்றுவதாக வாக்குறுதி கொடுத்திருந்ததைச் சில தமிழபிமானிகள் அண்மையில் சுட்டிக்காட்டி அதை அகற்றுமாறுகேட்டிருந்தார்கள்,மேலும் முகாம்களையும் படைகளையும் தமிழ் ஈழமடங்கிலும் குவித்து வரும் தடிச்சாமியார் இந்தக் கோரிக்கை பற்றி மூச்சுக்கூட விடவில்லை. இந்த நிலையில் 6 5.1979 வீரகேசரிப் பத்திரிகையில் தார்மீகச் சாமியாரின் ஐயன்ன தேயன்ன கட்சிக்கு வக்காலத்து வாங்கி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஒருதார்மீகக் குஞ்சு ஒரு நிபந்தனையை வல்வை மக்களுக்குஎதிராக விதித்துள்ளது. அந்த நிபந்தனை இதுதான்,

''ஐயன்ன தேயன்ன கட்சியை வல்வை நகர சபைத் தேர்தலில் தெரிவு செய்தால்தான் இராணுவ முகாம் அகற்றப்படும்''

என்பதுதான் அந்த தார்மீக மந்திரத்தின் உச்சாடனமாகும். நாளும் பொழுதும் தார்மீக மந்திரத்தை உச்சரிக்கும் தபசிகள் குழுவினர் ஜனநாயக பாரம்பரிபரியப்படி சுயாதீனமாக தமது விருப்பப்படி தமக்கொரு ஆட்சிக்குழுவை அமைத்துக்கொள்ளும்அந்த உரிமையைக்கூட சிங்கள ஏகாதிபத்தியத்தின் தாசர்கள் மறுத்து இராணுவத்தைக் காட்டி தமக்கு வாக்களிக்கும்படி மிரட்டியிருக்கிறார்கள், நிபந்தனை போட்டிருக்கிறார்கள்.

இதைப்பார்த்த போது பாரதியார் பாடிய—

''நாட்டில் அவமதிப்பும்
நாணின்றி இழிசெல்வந்
தேட்டில் விருப்பம்
கொண்டே சிறுமையடைவர்''

என்ற பாடல்தான் நினைவுக்கு வருகின்றது, அதாவது தமக்கு வரக்கூடிய அவமதிப்பைப்பற்றிக் கொஞ்சம்கூட வெட்கப்படாமல் கையில் அகப்பட்டதைச் சுருட்டிச் செல்லும் மனே பாவம் பிடித்த அற்ப பிறவிகள்தான் இவர்கள் என்கிறார் பாரதியார்;

இந்தப் பிரகிருதி மேலும் திருவாய் மலர்ந்தருளியிருப்பதாவது,

''இராணுவம் அகற்றப்படுமானல் மீனவர்கள் எதுவித பீதியுமின்றிகடற்றெழில் செய்யமுடியும்''

என்பதுதான் அந்தமுகாரி கீர்த்தனத்தின் இறுதிவரிகளாகும்,

இதன்மூலம் இந்தப் பிரகிருதி ஒரு உண்மையை பகிரங்கமாகவே ஒப்புக் கொள்கிறது. அதாவது இந்தஇராணுவம் முகாம் மீனவ சமுதாயத்திற்கு இன்னல் விளைவிக்கும் கூடாரமாகவே இருந்து வருகின்றதுஎன்பதுதான்அந்த உண்மையாகும். மீனவசமுதாயத்திற்குமட்டுமல்ல முழுத்தமிழ்ச் சமுதாயத்திற்குமே பெரும் இன்னல் விளைவிக்கும் கும்பல் என்பதுதான் உண்மை நிலையாகும், இதை அகற்றத்தானே தமிழ் இனம் விடுதலைக்குப் போராடுகிறது, எத்தகைய துன்பத்தையும் தாங்கிக்கொள்ள தயாராகியுள்ளது, எதிர்காலதமிழினத்தின் இன்ப வாழ்வுக்காக நிகழ்கால தமிழினம் இன்னல்களைச் சுமக்கிறது, எந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தமிழினம் போராடுகின்றதோ அந்த ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக ஏன் இது போன்ற கோடரிக்காம்புகள் குறுக்கே நிற்கின்றன? ஏகாதிபத்தியத்திற்கு ஏன் துணைபோகின்றன?ஏன்ஆலாபனைஎடுக்கின்றன? ஏன் அம்மானைஇசைக்கின்றன? ஏன் அடிபணிகின்றன? அடிவருடுகின்றன?

அதற்கான காரணத்தை பாரதியார் வாயிலாக கேட்டால்.

''சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்கார்டி!
செம்மை மறந்தாரடி'' என்கிறார்.

உடன்பிறப்புக்கள் அதிகார வெறியினரால் துன்புறுத்தப்படும்போது கூட அதைப்பற்றி சிந்தை கலங்காது இருக்கும் இச்சிறுமதியாளரைப்பாரதியார்இனங்காட்டியுள்ளார்.

வல்வெட்டித் துறையில் மட்டுமன்றி மலரும் தமிழ் ஈழத்திலிருந்து சகல ஏகாதிபத்தியப்படைகளும்என்றே ஒருநாள் மூட்டை முடிச்சுகளுடன்வெளியேறவேண்டிவரும் என்பதை வல்வை மக்கள் மட்டு மன்றி விடுதலையை வேண்டி நிற்கும் வீரமக்கள் அனைவரும் அறிவர் என்பதை ஐயன்ன தேயன்ன சட்சியின் தறுதலைகள் உணர்ந்து கொள்ளும் நாளும் வந்தே தீரும்.

—பொன். பூலோகசிங்கம்

# பன்னிரண்டும் நாங்களே!

## திருக்கோணமலையின் தீர்க்கமான முடிவைக்கண்டு தமிழ் உலகே வியந்தது!

இப்படி ஒருசெய்தி 20-5-79 காலைத்தினசரிகளில் வந்திடவேண்டும். ஆம்! அது வந்தேதீரும். அதுவரைத் தான் வேண்டும். அப்போது தான் — ஆணவம் பேசிடுவோர் அடங்குவர்—அகந்தையை அவிழ்த்தோர் அடிபணிவர் — எட்டப்பர்கள் இடறுவர், ஏன்—தமிழ் உலகே திருக்கோணமலையானின் ஒற்றுமையைக்கண்டு புளகாங்கிதமடையும்.

ஆமாம்-தம்பிகளே நகரை நாமே ஆளப்புறப்பட்டுவிட்டோம்.

சரித்திரத்திலேயே ஒரு தமிழன் எதிர்க்கட்சித் தலைவனுவதற்குத் தர்மம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது போல நமது நகரை நாமே ஆள்வதற்குரிய வழியை இப்போது சந்தர்ப்பம் ஏற்படுத்திவிட்டது. இதுதருமத்தின்-உண்மையின் வெற்றியாகும்.

சிவானந்தங்களும் சொக்கட்டானுடும் சோமபாலாக்களும் இனத்தைக்காட்டிக் கொடுக்கும் யூ-என்-பி பந்தங்களும் கட்டுக்காசிழக்க வேண்டும்.

''கூட்டணியினர் கூட்டாக வென்றனர்;''

''மூன்று அணிகளுக்கும் முக்காடு;''

திருக்கோணமலை திரண்டெழந்தது.

சிவானந்தம் சிதறினர்.

சோமபால சோகமானர்;

இஸ்மாயில் புஸ்வாணமானர்.

இப்படியெல்லாம் செய்திகளைக் கேட்கும்போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது? அந்த இனிமைக்கு வழியென்ன?

அதோ அண்ணதன் சுட்டு விரல்காட்டிஒருமை-அதுவே நமது பெருமை என்கிறார்—

இதோ தந்தை செல்வா தனதுபுன்முறுவல் பூத்த முகத்துடன் காட்சியளிக்கின்றார். அவர் விட்டுச் சென்ற ஒற்றுமை என்றுமே அழியாது—திருக்கோணமலையே! தீரர்களின் பாசறையே — அருட்கோணநாதர் வதியும் அமுதமலையே-— கோழை பிறக்காத கோணேச பூமியே— ஈழத்துப் பாஞ் சால ங் குறிச்சியே— ஆணவத்தை வேரறுக்கும் மீனவர்கள் வாழும்திராவிட மண்ணே! உனது தீர்ப்பென்ன?உனது முடிவென்ன உனது ஒருமைகண்டு உலகே பெருமைப்படும்.

மூன்று அணிகளும் மூக்குடைபட்டன—

பன்னிரண்டு அபேட்சகர்களும் அதிசயிக்கத்தக்க வெற்றி பெற்றனர் என்கிற இனிப்பான— செய்திவரட்டும்—

பன்னிரண்டுதொகுதிகளை வென்றேமென்று பாரெல்லாம் வியந்திடவோர்சரிதம் செய்வீர், புண்ணிரண்டு கொண்டோர்கள் புலம்பிடட்டும் புவனமெலாம்நம் பெருமை விளங்கிடட்டும்.

—திருகோணமலைக் கவிராயர்

# யூ·என்·பி· ஆட்சியில் விலைவாசி உயர்வு

## ஏழை வயிற்றிலடிக்கும் யானைகட்சிக்கு வாக்களிக்கலாமா?

| பொருள் | | 1977ல் விலை | 1979ல் விலை |
|---|---|---|---|
| கட்டிப்பால் | — | 3.25 | 5.00 |
| 1 இரு, மா | — | .81 | 1.12 |
| 1 இரு. பாண் | — | .75 | 1.00 |
| ஒரு முட்டை | — | .60 | .85 |
| விட்டாமோல்ட் | — | 8.50 | 13.50 |
| 1 போத்தல் ஜாம் | — | 5.60 | 15.75 |
| மார் மைட் | — | 4.70 | 11.00 |
| எஸ். எம். ஏ, | — | 4.95 | 28.00 |
| சனடோஜன் | — | 13.50 | 92.00 |
| கோம்பா சோப் | — | 1.15 | 2.00 |
| ரெக்சோனு | — | .95 | 1.60 |
| சன்லைட் | — | .72 | 1.25 |
| 80 பக்க கொப்பி | — | .75 | 1.10 |
| HB பென்சில் | — | .27 | .75 |
| பைசிக்கிள் | — | 700.00 | 1900.00 |
| டோர்ச் பற்றறி | — | 1.70 | 2.20 |
| பிரிஸ்டல் சிகரெட் | — | .23 | .34 |
| உரம் (1இரு.) | — | 30.00 | 60.00 |
| 1000 ஓடு | — | 750.00 | 1800.00 |
| சீமெந்து 1பைக்கட் | — | 21.50 | 23.50 |
| 1 அந்தர் விறகு | — | 6.50 | 13.00 |
| மின்சார பல்ப் | — | 3.55 | 5.75 |
| மண்வெட்டி 1 | — | 22.50 | 35.00 |

# காசோலையை தமிழில் எழுதி அனுப்பாவிட்டால் காசே வேண்டாம்

## அரசாங்க அதிபருக்குச் சச்சிதானந்தன் கடிதம்

யாழ். மாவட்டத்துக்கு வந்திருந்தஇலங்கைநிர்வாக சேவைப் பயிற்சியாளருக்கு அரசாங்க அதிபரின் அழைப்பின்பேரில் சென்றுவிரிவுரை நிகழ்த்திய, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சச்சிதானந்தன். அவ்விரிவுரைகட்கான ஊதியம் தொடர்பானபற்றுச்சீட்டுக்கள் அனைத்தும் தமிழில் இருந்தால்தான் காசு பெறுவதற்குக் கையெழுத்துப் போடுவேன் என வற்புறுத்தியதன் பெயரில் யாழ் அரசாங்க அதிபர் தமிழ்ப்பத்திரங்களைப் பெற்று தமிழில் தட்டச்சுச் செய்து அனுப்பியிருந்தார். ஊதியமாகப் பெறப்படும் பணத்துக்கான காசோலை தமிழிலும் இருந்தால்தான் காசுபெறுவதாகவும்,அல்லாவிடில் காசையே அனுப்ப வேண்டாம்எனவும் தமிழிலும் அல்லாத காசோலையை அனுப்பித்தனதுமனதைப் புண்படுத்த வேண்டாம் எனவும், திரு. சச்சிதானந்தன் அவர்கள்அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில்கூறியுள்ளார்கள்இரண்டு விரிவுரைகளை ஆற்றிய இவருக்கு ஏறத்தாழ முந்நூறு ரூபாய் ஊதியமாக வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தொழில்வாய்ப்புக்களில் தமிழர் புறக்கணிப்பு!

## தமிழ்ஈழத்தில் சிங்களவர் நியமனம்

தொழில வாய்ப்புக்களை போதியஅளவு பெருமையால் தமிழ் மக்கள் வெறுப்பும் வேதனையும் கொண்டுளர். இந்தக்குறையைநீக்குவோம் என்று தேர்தலுக்கு முன்னும் தேர்தல் முடிந்த உடனும் கூறியஐ,தே.கட்சியின் அரசாங்கம்- தர்மிஷ்டம் பேசிப் பேசித்தன்னிஷ்டப்படி நடக்கும் அரசாங்கம் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐ' தே. கட்சியின் அரசாங்கம்—தேர்தலில் த. வி. கூட்டணியை வெல்ல முடியாதென்பதை அறிந்தும் உலகத்துக்கு உரைப்பதற்காகப் போட்டியிடும் ஐ. தே. கட்சி அரசாங்கம் சென்ற இருபது மாதங்களில் தமிழ் மக்களை எவ்வாறு புறக்கணித்துளது பாருங்கள்!

★ **கூட்டுத்தாபனங்களில் தமிழர் புறக்கணிப்பு**

அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் ஒன்பது இயக்குநர் உளர். தமிழர் ஒருவருமில்லை.

இ. போ. சபைக்குத் தொடக்கத்தில் ஒரு தமிழரும் இயக்குனராக நியமிக்கப்படவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் அமைச்சு பலருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுத்து வருகிறது. இதிலும் தமிழர் முற்ருகப் புறக்கணிக்கப்பட்டுளர்.

தி[illegible]கோணமலை நகர சபைக்கும் வவுனியா நகர சபைக்கும் முந்திய அரசாங்க காலத்தில் தமிழர்கள் விசேட ஆணையாளர்களாகக் கடமையாற்றினர். ஐ. தே. கட்சி அரசாங்கம் இந்த சபைகளுக்குத் தமிழ் தெரியாத சிங்களவர்களை விசேட ஆணையாளர்களாக நியமித்துளது.

★ **உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் தமிழர் புறக்கணிப்பு:**

கொழும்பு மாநகரசபைக்கு 47 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். கொழும்பில் 25 வீதம் தமிழர்உளர்: அமைச்சர் தேவநாயகம் 19 வீதம் தான் என்கிருர். 63பேரை நியமித்த ஐ. தே. கட்சி 4 தமிழரையே வேட்பாளராக நியமித்துளது. இவர்களில் மூன்று தமிழரே 47க்குள், 8 ஆம் இடத்திலும் 32,38ஆம் இடத்திலும் நியமனம் பெற்றுள்ளனர். 19 வீதம் தான் தமிழர் என்ருலும் பன்னிரண்டு பேரை நியமித்திருக்க வேண்டும், ஒவ்வொரு ஐந்துபேருக்கும் ஒருவராக இடம் கொடுத்திருக்க வேண்டும். இது தான் தர்மிஷ்ட அரசாங்கத்தின் இனச்சமத்துவம், சமதர்மம், இனச்சமத்துவ ஐக்கியம் என்று ஓயாமல் கத்தும் ஐ. தே. கட்சி.

கண்டி தலவாக்கொல்லை, அப்புத்தளை, நாவலப்பிட்டி முதலியவற்றின்வேட்பாளர் பட்டியல்களிலும் தமிழர்களுக்குரியஇடமும்,போதிய இடம் கொடுக்கவில்லை;

அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள இ. தொ. காங்கிரசின் பொதுச் செயலாளர் திரு. செல்லச்சாமி கூறியதை நோக்குங்[illegible]ள்.

'ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் எமக்கு நியாயமான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. வடக்கிற்கும். கிழக்கிற்கும் வெளியே வாழுகின்ற தமிழ் மக்களுக்கு அரசியலில் போதிய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது எமது கோரிக்கை. கொழும்பு மாநகரசபையைப் பொறுத்தவரை தமிழர்களுக்கு இரண்டாவதுஇடம் உண்டு; என்பது எம்நிலை. இங்கு தமிழ் மக்களின் தொகை 75 ஆயிரத்துக்கு மேல்'

திரு. செல்லச் சாமியின் இந்தக்கண்டனக் குரலுடன் அமைச்சர் தேவநாயகத்தின் அடிமை மோகக் குரலையும் ஒப்பிட்டுப் பார்க்குக'' கொழும்பில் 19 வீதம் தமிழர்களே இருக்கிருர்கள். இம்மாநகரசபைக்கு நாம் 4 தமிழர்களை நியமித்துள்ளோம். இந்த நியமனம் விகிதாசாரப்படி சரியானதே;' (ஈழநாடு 6.5.79)

தேவநாயகம் ஐயா 63 பேரில் 19 வீதம் 12பேர் என்பதைக்கூடத் தெரியாமல் மதிமயங்கிப்பேசுகிருர்,

## யூ.என்.பி. ஆட்சியில் வேலைவாய்ப்புகளில் தமிழர்களுக்கு பட்டைநாமம்!

### புள்ளி விபரம் இதோ!

| துறை | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|
| அரசாங்க நிர்வாக சேவை (1978) | ... 71 | ... — |
| உதவி பொலீஸ் இன்ஸ்பெக்டர் | ... 15 | ... — |
| நில அளவையாளர் | ... 40 | ... — |
| கடற்படை | 2170 | ... 146 |
| உதவி புகையிரத நிலைய அதிபர்கள் | ... 95 | ... 4 |
| ஆசிரியர்கள் | ... 10,500 | ... 500 (க்கும் குறைவு |
| பட்டதாரி ஆசிரியர்கள் | ... 1000 | ... — |
| வடமாகாண வங்கிகளில் சிற்றூழியர் | ... 18 | ... 7 |
| வடமாகாணத்தில் | | |
| இலங்கை மின்சாரசபை | ... 11 | ... 2 |
| 2 ஆம் தர அஞ்சல் அதிபர்கள் | ... 100 | ... 5 |

★ குறிப்பு: நிதிதிட்டமிடல் அமைச்சரின் கூற்றுப் படி 140,000பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது: இதில் 1000 பேர் கூடத் தமிழர் இல்லை.

# சிங்கள ஏகாதிபத்தியத்தின் சவாலுக்கு மே 19ல் பதிலடி கொடுப்போம்!

## தனி நாடே முடிவானது என்பதை மீண்டும் நிருபிப்போம்

1948ம் ஆண்டு மாசித் திங்கள் நாலாம் நாளில் இருந்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு பொங்கி எழும் கடல் அலைகள் போன்று ஒன்றின் பின் ஒன்ருக சோதனைகளும் வேதனைகளும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கவரிமான் போன்று தன் மானம் ஒன்றே எம் இலட்சியம் என்ற நிலையான கொள்கையுடன் வாழும் தமிழ் மக்களுக்கு 1977 ம் ஆண்டு ஆடிப் பொதுத் தேர்தல் மூலம் தனித் தமிழ் நாடு அமைப்பது உறுதியானது இறுதியானது என்று உலகறிய தீர்த்த தீர்ப்புக்கு உள்ளூர் ஆட்சித் தேர்தல் என்ற மாயமான் மூலம் சோதனை மேல் சோதனை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைய உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சவாலாக நாம் ஏற்போம்' நாட்டுப் பிரிவினை தவிர்க்க முடியாதது. தமிழ் இனம் தனி வழி செல்வது அசைக்க முடியாதது தமிழ் ஈழம் அமைப்பதுஎமது உறுதியான உறுதி யானது முடிந்த முடிபு என்பதை மீண்டும் உலக அரங்கில் எடுத்துக்காட்டி மாண்புமிகு ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் தார்மீகம் என்ற முகமுடியை கிழித்தெறிவதுடன்சிங்களக் காடையர்களின் அடக்குமுறை ஆட்சியில் முதுகுத் தோலை உலக அரங்கில் நிறுத்தி உச்சரித்துக் காட்டுவோம் இதை செய்யச் சபதம் எடுக்காத தமிழன் தமிழனுக இருக்க முடியாது.

உள்ளூராட்சிமன்றவரலாற்றில் எதிர்வரும் 19ம் திகதி நடைபெறஇருக்கும் தேர்தல் இதற்கு முந்தி எந்தக் காலத்திலும் நடைபெருத முறை சகல துறைகளிலும் குறிப்பாக தமிழ் மக்களை பொறுத்தமட்டில் மிகவும் முக்கியமானது.

தமிழ் இனம் உலக அரங்கில் தலைநிமிர்ந்து தன் மானத்துடன் வாழ தனித் தமிழ்நாடு வேண்டுமா? அல்லது காட்டிக் கொடுக்கும் யூதாஸ் கரியோத்துக்களின் கட்சிகளான ஐக்கியம்பேசி தமிழ் இனத்தின் கழுத்[illegible]த அடி ஒட்ட அறுக்கும் சிங்க[illegible] ஐக்கிய தேசிய ஏகாதிபத்திய கட்சியா—

அல்லது குமார் பொன்னம்பலத்தின், கொள்கை அற்ற குறிக்கோள் அற்ற இலட்சியம் அற்ற ஜெயவர்தனுவின்அன்புக்குப்பாத்திரமான குட்டிக்கட்சி கூறுவது போன்று புகையிரத சேவை, பஸ்வண்டி சேவை, அபிவிருத்தி திட்டங்கள் (மாநகரசபைநகரசபைகள் சட்டவிதிகளுக்கு உட்படாதவை) கல்லும் மண்ணும்

**ஹென்றிஆசீர்வாதம் (முன்னுள் ப.ச. உறுப்பினர்)**

போடவோ [மருத்துவமனை கட்டவோ மலசல கூடம் அமைக்கவோ எதுவேண்டும் என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

1957 ஆண்டு ஆடி 26ம் திகதி தந்தை செல்வாவுக்கும் பண்டாரநாயக்காவுக்கும் இடையில் ஏற்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத் விடாது சிங்கள நாட்டில் ஐச்கிய தேசியக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ளஉள்ளூர் ஆட்சி மன்றங்கள் பண்டார நாயக்கா சிங்கள் இனத்தையும் பௌத்த மதத்தையும் தமிழர்களுக்கு அடிமையாக விலை கூறி விற்றுவிட்டார் என்று ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டுமென்றும் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை கேட்டு கொண்டதையும் கண்டிப்பாதயாத்திரையையும் தமிழ் இனம் மறந்துவிட முடியாது.

1965ம் ஆண்டு தந்தை செல்வாவுக்கும் டட்லிசேன நாயக்காவுக்கும் இடையில் ஏற்பட்ட மாவட்ட சபைகள் அமைக்கும் இடைக்கால ஒப்பந்தத்தையும் சிங்கள நாட்டில் உள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சிஆதிக்கத்தில் உள்ளஉள்ளூர்ஆட்சி மன்றங்கள் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிஒப்பந்தத்தை அமுல் செய்ய விடாமலும் திருகோணமலை கோணேசர் ஆலயப் பகுதியை புனித நகராக பிர[illegible] [illegible] திருச் செல்வம் அவர்கள் எடுத்த தீவிர நடவடிக்கைகளையும் தவிடு பொடியாக்கிய பெருமை இந்த உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கே உரியது,

கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய உள்ளூர்ஆட்சி மன்ற வாக்காளப் பெருமக்களே உங்கள்தீர்ப்பு மிகவும் ஆணித்தரமானதாக இருக்கட்டும்.

சாதியின் பெயரால், சமூகத்தின் பெயரால் சமயத்தின் பெயரால், வாக்குப் பிச்சைகேட்டுவரும்கொடிய ஓநாய்களை பொறுத்தவரை மிகவும் மச்சரிக்கையாக இருங்கள் தமிழ்இனத்தின் ஒரே தீர்ப்பாக 'தமிழ்நாடு' தீர்மானத்தை தமிழர் விடுதலை கூட்டணி செயல்படுத்துவதற்கு உள்ளூர் ஆட்சிமன்றங்களை எமதுபோர்க்களங்களாக மாற்றி அமைப்போம்; பல்இழித்து பட்டம் பதவிபெறும் பத்தாம் பசலிகளுக்கு பா[illegible]ம்.

அண்ணுகூறிய கட[illegible] கண்ணியம், கட்டுப்பாடு என்னும் கேடயம் தாங்கி தந்தை செல்வாகாட்டிய

—4-ம் பக்கம் பார்க்க

# தமிழா உன்னைத்தான்

## வாக்குச்சாவடிக்கு செல்லுமுன் ஒருமுறை சிந்தித்துப்பார்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மே 19ல் வாக்களிப்பதற்குமுன் ஒவ்வொரு தமிழ் மகனும் கடைசியாக ஒருமுறைசிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இத்தேர்தலிலே தமிழர் விடுதலைக் கூட்டணிவெற்றி பெற்றால்மட்டும்போதாது; தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடும் கட்சிகளுக்கு ஒரு வாக்குத்தானும் கிடைக்கக் கூடாது.

ஏனெனில் ''சுதந்திரத் தமிழீழம்'' எனும் தமிழினம்ஏற்றுக்கொண்ட கொள்கையை— இலட்சியத்தை— ஏற்றுக்கொள்ளாத கட்சிகளே இத்தேர்தலில்தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடுகின்றன.

தமிழீழத்தில், தமிழீழத்தின் சுதந்திரத்தை— தனிநாட்டுக் கொள்கையை— ஏற்றுக்கொள்ளாத எந்தக் கட்சிக்கும் இடமில்லையென்பதை இந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் திட்டவட்டமாக எடுத்துக்காட்டவேண்டும்.

'சுதந்திரத் தமிழீழம்'' எனும் இலட்சியத்தையே தனது அடிப்படைஇலட்சியமாகவும், உயிர் மூச்சாகவும் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே தமிழீழத்தின் ஆறு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் சிங்கள ஏகாதிபத்திய யூ,என்-பியுடனும், அதன் கைக்குழந்தையான குமார் காங்கிரசுடனும்இத்தேர்தலிலே மோதுகிறது'

எனவே தமிழீழவிடுதலையை நாடும் தமிழினஅணிகள்அனைத்தும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் பக்கமே இத்தேர்தலில் நிற்கவேண்டும்.

இந்தஉள்ளூராட்சித்தேர்தலில்— தமிழீழவிடுதலையை ஆதரிப்போர் ஓர் அணியிலும், அதை எதிர்ப்போர் மறுஅணியிலும் நிற்கிறார்கள்,

எனவே தமிழ்பேசும்மகன் ஒவ்வொருவனும் மிகவும் நிதானமாகச் சிந்தித்துத் தனது வாக்கைப் பிரயோகிக்கவேண்டும்.

இத்தேர்தலில்கொள்கையும், கொள்கையும்—இலட்சியமும் இலட்சியமும் மோதிக் கொள்ளுகின்றனவேயன்றி— தனிநபர்கள் அல்ல!

1977 ஆடிப்பொதுத்தேர்தலில் தமிழீழக்கொள்கையை ஏற்றுக்கொண்டதமிழ் மக்கள் 1979ல் உள்ளூராட்சித்தேர்தலில் அதை நிராகரித்து விட்டார்கள் என்றோ—தமிழீழக் கொள்கைக்கு ஆதரவு தளர்ந்துவிட்டதென்றோ சிங்கள அரசாங்கம் பிரசாரம்செய்வதற்குஅணுவளவும்நாம்இடம் கொடுத்துவிடக் கூடாது,

1977ஆடிப்பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிவடதமிழீழத்தின் [illegible]4 தொகுதிகளிலிருந்தும் வேரோடு பிடுங்கியெறியப் பட்டது. வடதமிழீழத்திலிருந்து ஒருகோடரிக்காம்பையும் ஆளுங்கட்சியால் உருவாக்க முடியவில்லை;

வடக்கையும் நாமே ஆளுகிறோம் என்று வாயளவிற் கூறினாலும்—வடக்கே அவர்கள் நிலைகொள்ள முடியவில்லை,

இப்போது உள்ளூராட்சித் தேர்தல் மூலமாவது ஒன்றுபட்டுநிற்கும் வடதமிழீழத்துக்குள்வாலைநுழைத்துவிடலாமா என்று ஆலாய்ப் பறக்கிறது சிங்கள ஏகாதிபத்தியம்!

அதற்காக வேண்டியஅளவு வேண்டியதையெல்லாம் அள்ளி வீசுகிறது.

தமிழ் மக்களின் வாக்குகளை விலைக்கு வாங்கமுடியாதென்பதைஐ,தே.கட்சிஇத்தேர்தலில்புரிந்துகொள்ளும்

உத்தியோகம் கொடுப்பதாகக்கூறி, தமிழனின் உரிமையுணர்ச்சியை வீழ்த்திவிட முடியாதென்பதைஇத்தேர்தலில் தமிழ் மக்கள் யூ.என்.பிக்கு உணர்த்திவைப்பார்கள்,

ஒருகுடம் பாலுக்கு ஒரு துளிவிஷம் போதும்!

எல்லோரையும் கூட்டணியில்தெரிவுசெய்துவிட்டுஒரேயொருவரை மட்டும் யூ.என்.பியில் தெரிவு செய்தால்கூட அதனால் இனத்துக்கு அழிவே நேரும்!

தென்தமிழீழத்தில் ஒரேயாரு தேவநாயகம்தான் 1977 தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்— அதுவும் 500 பெரும்பான்மை வாக்குகளினால்!

அதன்பயனாக— இன்று இரண்டு கூட்டணி எம்.பீக்களை வலைவீசி யூ'என்,பி, வலைக்குள் வீழ்த்தி விட்டார்!

எனவே ஒன்றுகூட யூ'என்-பி.க்கு கிடைக்காது. தமிழ் மக்கள் தமது வாக்குச் சீட்டுக்களால்- யூ.என்,பிக்கு ஆழமான சவக்குழியைத் தோண்டிவிட வேண்டும்.

மீண்டும் அது தமிழீழத்தில் தலைதூக்க முடியாதவாறு தமிழ்மக்கள் தமது வாக்குச்சீட்டுக்களைப் பிரயோகிக்க வேண்டும்!

தமிழினத்தின்ஒரேகொள்கை— ஒரே இலட்சியம்— உயிர்மூச்சு— சுதந்திரத்தமிழீழம்தான் என்பதையும்—

தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே விடுதலை இயக்கம் தந்தை செல்வாவும், அமரர் ஜீ.ஜீயும் உருவாக்கிய— தமிழர் விடுதலைக் கூட்டணியே என்பதையும்—

தமிழ் பேசும் மக்களின் இன ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் சதியாலும் சூழ்ச்சியாலும் தகர்த்துவிட முடியா தென்பதையும்—

மே19- உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலே தமிழீழத்தின் ஆறுசபைகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலம் நாம் எடுத்துக்காட்ட வேண்டும்,

தமிழினத்தின் ஒற்றுமையின் சின்னம்—உதய சூரியன்;

தமிழீழ விடுதலைக்கோரிக்கையின் சின்னம்— உதய சூரியன்!

தமிழ் பேசும் மக்களின் சுயமரியாதையின் சின்னம்—உதய சூரியன்!

இதைமறவாதீர்! எதிரிகளின் சூழ்ச்சிக்கும் ஆசை வலைக்கும் பலியாகாதீர்!

ஒவ்வோர் ஊரும் திரண்டெழுந்து உதய சூரியனுக்கே வாக்களிக்கட்டும்;

தமிழீழ சுதந்திரத்தை ஏற்காதோருக்கு தமிழீழ அரசியலில் இனி இடமே இல்லை என்பதை எடுத்துக் காட்டட்டும்! —கோவை

—1-ம் பக்கத் தொடர்

யும் ஆணைக்குழு நியமிக்கத் தவறிய ஐ. தே. கட்சிக்கு தமிழ் பேசும் இஸ்லாமியன் எவனும் வாக்களிக்க முடியுமா?

தரப்படுத்தலை ஒழித்து விட்டோமென்று கூறிவிட்டுப் புழக்கடை வழியாக புதிய அனுமதி முறையைப் புகுத்தி, திறமையும், தகுதியும் உள்ள தமிழ் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய விடாது கதவடைப்புச்செய்யும் யூ.என். பிக்கு தமிழன் வாக்களிப்பானா?

தமிழ் மாணவர்களை நேர்மையற்றவர்கள் என்றும் தமிழ் பரீட்சகர்களை ஏமாற்றுக்காரர்கள்என்றும் அவமதித்த சிறில் மத்தியூ கட்சிக்கு வாக்களிப்பானா சிந்தனை செய்யும் தமிழன்?

தமிழ்ப் பெண்குலத்தின் தலைவியான திருமதி மங்கையர்க்கரசியை கேவலமான வார்த்தைகளில் நிந்தனை செய்து பழியுரைத்த சிறில் மத்தியூவின் யூ. என். பிக்கு வாக்களிப்பானா தமிழ் மகன்?

தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் இலட்சியமான தமிழ் ஈழக்கோரிக்கையைத் தடைசெய்யக்கொடிய சட்டங்களைக் கொண்டுவரப் போவதாக அடிக்கடி மிரட்டும் காமினிதிசநாயகாவின் கட்சிக்கு வாக்களிப்பானா தமிழ் மகன்?

## தேர்தலுக்காக புதிய பஸ்சேவை

ஐ,தே.க, தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மதுவுக்கு யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீது திடீர் அக்கறை ஏற்பட்டு உடனடியாக புதிய பஸ்சேவை ஒன்றை முஸ்லிம் குருக்[illegible] ஆரம்பித்துள்ளனர். [illegible] ஆரம்[illegible]வைத்த பஸ்ஸில்ஏறிச் சென்று முஸ்லிம்கள் உதய சூரியனுக்கே வாக்களிக்க முடிவு செய்துள்ளனர்.

# வேலை வங்கிப் படிவங்களைக் கொடுத்து வவுனியாவில் யூ.என்.பி. ஓட்டுவேட்டை!

## பாராளுமன்றத்தில் செல்லத்தம்பு அம்பலப்படுத்தினர்

வவுனியா நகரசபைத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு யூ,என்.பி. பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகிறது வேலை வங்கிப்படிவங்களைக் காட்டி ஓட்டு வேட்டையாடும் முயற்சியிலும் யூ.என்.பி. இறங்கியுள்ளது.

இதைப்பாராளு மன்றத்தில் முல்லைத்தீவு பா,உ. திரு. சே.மா, செல்லத்தம்பு அம்பலப்படுத்தினர். 8.5-79ல் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணைமீதுபேசியமுல்லைத்தீவு பா,உ: திரு.சே.மா, செல்லத்தம்பு பின்வரும், கேள்வியை அங்கு எழுப்பினர்.

''வவுனியா மாவட்ட அமைச்சர், சிலவேலை வங்கிப்வடிவங்களை தயாரித்து அவற்றை வவுனியாவில் நகரசபைக்குப் போட்டியிடும் யூ,என்.பி. வேட்பாளர்கள் மூலம் வாக்காளர்களுக்கு விநியோகித்து வருகிறார். இவ்வேலை வங்கிப் வடிவம் வவுனியாமாவட்ட அமைச்சரின் அலுவலகத்தில்றோணியோசெய்யப்பட்டிருக்கிறது, அவற்றிலொன்றை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்,

யூ.என்,பிக்கு வாக்களித்தால், வேலை கிடைக்கும் என்று வாக்காளர்களுக்கு ஆசையூட்டப்படுகிறது.

யூ.என்.பி. வேட்பாளர்களால் வாக்காளர்களுக்கு எதுவுமே கொடுக்க முடியாது என்பது எமக்குத் தெரியும், ஆனால் இப்படிவங்கள்உடனடியாகவாபஸ் பெறப்பட வேண்டும்,

வின்சன்ட் பெரேரா:— நான்இப்பிரச்சினையை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்''

யூ,என்,பி. எத்தனை ஆசை வார்த்தைகளைக் கொட்டிய போதிலும், வவுனியாவில் இத்திங்கள் 19ம் திகதி மாநகர சபையில் தமிழீழத்தின்உதயசூரியன்கொடியே உயரப் போகிற தென்பது சர்வநிச்சயம்,

மானமுள்ள;ரோசமுள்ள, தமிழ் இரத்தமோடும்எந்த ஒரு தமிழனும் யூ. என்.பி.க்கோ வேறு கட்சிகளுக்கோ வாக்களிக்க முடியாது!

ஈழத்தமிழனது பாசறை யொன்றேயொன்றுதான்!

அதுவே தமிழர் விடுதலைக் கூட்டணி!

தமிழ் பேசும் மக்களின் தன்மானம், ஒற்றுமை, விடுதலை இவற்றின் சின்னமே உதய சூரியன்!

அதோ தந்தை செல்வா ஆணையிடுகிறார்! அமரர் ஜீ.ஜீ. கட்டளையிடுகிறார்!

தமிழ் மகனே! உனது ஒவ்வொரு வாக்கும் தமிழ் இனத்தின் சுயமரியாதையைப்பேணும் உதய சூரியனுக்கே!

தந்தை செல்வா வழி [illegible] சிவா அழைக்கின்றார்!

யாழ் நகரின் இளம் தலைவர் யோகேஸ்வரன் அழைக்கின்றார்!

தருக்கரைஅடக்கும் திருக்கோணமலையின் தளபதி சம்பந்தன் அழைக்கிறார்!

எல்லைக்காவலர் எமதருமைச் சிவா அழைக்கிறார்!

கடமை வீரர் நவமும் கர்மவீரர்துரையும்நோய்ப் படுக்கையிலிருந்தபடியே அழைக்கிறார்கள்!

உடுப்பிட்டியின் விடுதலைத் தங்கம் இராசலிங்கம் அழைக்கிறார்!

உதய சூரியனுக்கே வாக்களியுங்கள்!

மே 19-ல் உள்ளூராட்சி மன்றங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றுக்கேதனிப்பெரும் வெற்றி சேருங்கள்!

தமிழ்ப்பகைவர்களை வாக்குச்சீட்டினால் ஓடஓட விரட்டுங்கள்!

நாளை நமதே! தமிழ்ஈழம் நமதேயென்று வெற்றிப் பண்பாடுங்கள்! — கோவை

# ஐ. தே. கட்சிக்கு சகுனப் பிழை

தமிழீழத்தில் நடைபெறும் ஆறு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியடையப் போவதை வல்வெட்டித்துறை முன்கூட்டியே, எடுத்துக்காட்டிவிட்டது.

ஆம், மானமும் வீரமும் நிறைந்த வல்வெட்டித் துறையில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடுவதற்கென முதலாவது இடத்துக்கு நிறுத்தப்பட்டிருந்த திரு.சி. பிரேமச்சந்திரனும் ஆறாவது இடத்திற்கு நிறுத்தப்பட்டிருந்த பி.கனகராசாவும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதுடன், ஐ.தே.கட்சிக்கும் முழுக்குப்போட்டு விட்டார்கள். தமது விலகல் கடிதங்களை ஐ.தே.கட்சிச் செயலாளருக்கு அனுப்பி விட்டனராம்.

வல்வெட்டித்துறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பத்துக்கேகாரணமான பெரியார் ஞானமூர்த்திதலைமையில்அத்தனைகூட்டணி வேட்பாளர்களும் பெருவெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

—3-ம் பக்கத் தொடர்

அகிம்சை வழிசெல்லும் சத்தியமே இலட்சியமாகக் கொண்ட தன்மானங் கொண்ட வாக்காளப் பெருமக்களே உங்கள் வாக்குகளை தமிழன் விடுதலை சின்னமாகிய உதயசூரியன் சின்னத்துக்கு நேரே புள்ளடி இட்டு 1977 ஆடித்தீர்ப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

வாழ்க தமிழ் இனம்!

வளர்க தமிழன்ஒற்றுமை!

வெல்க தமிழர் விடுதலைக் கூட்டணி!

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது!